2nd September 1959]

Sri K. VINAYAKAM : வேறு யாராவது தனிப்பட்டவர்கள் இப்படி ஏதாவது ஞாபகார்த்த சின்னத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு மனு அனுப்பியிருக்கிறார்களா ? அவர்கள் அம்மாதிரியாக செய்வதற்கு அரசாங்கம் உதவி புரிய முன் வருவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மனு ஒன்றும் யாரும் அனுப்பவில்லை. பாஞ்சாலக் குறிச்சியில், கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட இடத்தில் யாராவது ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தின் உதவியை நாடினால் அதை அரசாங்கம் கவனிக்கும்.

Sagupuram Village

* 85 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a protest recently from the residents of Sagupuram village in Tirunelveli district against naming their village as Sagupuram ; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

Sri A. A. RASHEED : May I know the original name of this village and what was the necessity to change the name of the village ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இது உச்சரிப்பைப் பொறுத்தது என்று நினைக்கிறேன். சாகு என்பதை சகு என்றும் படிக்கலாம்.

Sri S. B. ADITYAN : காயல்பட்டிணத்தையொட்டிய ஒரு பகுதியாக சரகுபுரம் இருப்பதால் பெயர் வைப்பதற்கு முன் காயல் பட்டிணத்து பஞ்சாயத்தாரின் கருத்து தெரிந்துகொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரி தகவல் ஒன்றும் இல்லை.

Sri M. S. SELVARAJAN : சாகுபுரம் என்று தற்பொழுது பெயரிடப்பட்டிருக்கும் இடத்தில் இதற்கு முன்பு ஒருவிதமான ஊரும், கிராமமும் இல்லை என்பதும், தரிசான காடு மேடாக இருந்ததென்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? தங்களுக்குச் சொந்தமான இடத்தில் தங்கள் ஸ்தாபனத்திற்கு தங்கள் இஷ்டப்படி பெயர் வைத்ததற்கு தடை செய்கிறவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கேட்கிற விஷயத்தைப்பற்றி என்னிடம் ஒருவித தகவலும் இல்லை. இதுபற்றி கேட்ட கேள்விக்கு இல்லை என்று பதில் சொன்னேன்.

Union President's Tour

* 86 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா

(அ) நமது தேசத்தின் ஜனாதிபதி அவர்கள் 1959-ம் வருடம் ஜூன் மீ 14உ பெங்களூர் செல்லுகிறார் என்று போலீஸ்காரர்களையும், தோட்டி தலையாரிகளையும் பந்தோபஸ்துக்காகப் போடப்பட்டதா ?

(ஆ) எத்தனை போலீஸ்காரர்கள் ? எத்தனை தோட்டி தலையாரிகள் ?